சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சர் – மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் மலர் தூவி மரியாதை செலுத்தினார் உடன் பேரூர்க் கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் 131வது பிறந்த நாள்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மலர்ப்போர்வை போர்த்துகிறார்!

கழகத் தோழர்களுக்கு சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு வேண்டுகோள்!

கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களின் 131வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று (5.6.2026 - வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணியளவில் திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் உள்ள வாலாசா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மலர்ப்போர்வை போர்த்தி மரியாதை செலுத்துகிறார்.

அதுபோது சென்னை மேற்கு மாவட்டக் கழக, தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நாள்: 04.06.2026.

நே.சிற்றரசு,
செயலாளர்,
சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில்

முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா!

கே.ஆர்.என். இராஜேஷ்குமார் எம்.பி. – மருத்துவர் மா.மதிவேந்தன் – ராமலிங்கம் மரியாதை!

நாமக்கல், ஜூன் 5 - நாமக்கல் கிழக்கு மாவட்டம், முழுவதும் ஒன்றிய நகர பேரூர் பகுதிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நாமக்கல் பரமத்தி சாலையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கும், அவரது உருவப் படத்திற்கும் மலர் தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஷ்குமார் தலைமையில், முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் பார்.இளங்கோவன், மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, தெற்கு நகரச் செயலாளர் ராணா ஆனந்த் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில், தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, கலைஞரின் அரசியல், சமூக மற்றும் தமிழ்ப்பணிகள் குறித்து நிர்வாகிகள் நினைவு கூர்ந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் பழனிவேல், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

த.வெ.க. ஆட்சியில் தொடரும் அவலம்!

திருச்சியில் 14 வயது சிறுமிக்கு கூட்டு பாலியல் வன்கொடுமை!

மது கொடுத்து சீரழிக்கப்பட்ட சிறுமி காரில் இருந்து தூக்கி வீசப்பட்ட கொடூரம்!

திருச்சி, ஜூன் 5 - சிவகங்கையைச் சேர்ந்த மாரீசெல்வன் (43) என்பவர் கார் ஓட்டுநராகப் பணி புரிந்து வருகிறார். நேற்று மதியம் மாரி செல்வன் சிவகங்கையிலிருந்து திருச்சி காந்தி மார்க்கெட் கல்மந்தை காலனி குடியிருப்பில் வசிக்கும் ஆதிரா (எ) ஆதி தமிழன் என்கிற திருநங்கை மற்றும் அவரது நண்பர்களை பார்ப்பதற்காக வந்துள்ளார்.

அப்போது திருநங்கை ஆதிராவின் தங்கை கனி மொழியை (பெயரை மறைக்கவும்) (14 வயது) மாலை 5 மணி அளவில் கல்மந்தை காலனியிலிருந்து, மாரீசெல்வன் தனது காரில் சுற்றி காட்டுவதாக கூறி அழைத்து சென்றுள்ளார்.

மாரி செல்வன் அடிக்கடி அந்த பகுதிக்கு வருபவர் என்பதாலும் திருநங்கையான அண்ணனின் தெரிந்த நபர் என்பதாலும் சிறுமி சென்றுள்ளார். அவரு உடனே திருநங்கையான சிறுமியின் சகோதரரும், சில திருநங்கைகளும் சென்றதாக கூறப்படுகிறது.

சிறுமியை சிறிது தூரம் காரில் அழைத்துச் சென்ற கும்பல் மது கலந்த ஜூஸ் வகைகளை கொடுத்துள்ளது. இதனால் மயக்கமடைந்த சிறுமி ஒரு கட்டத்தில் வீட்டுக்கு செல்ல வேண்டும் என்று கூறியுள்ளார்.

அப்போது வேறொரு பகுதியில் மாரி செல்வராஜ் உடன் வந்த மேலும் மூன்று இளைஞர்கள் காரில் ஏறி உள்ளனர். அவர்கள் கூட்டாக சேர்ந்து சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது. மேலும் அடித்து துன்புறுத்தியதாகவும் தெரிகிறது. சுயநினைவு இழந்த சிறுமியை ஒரு கட்டத்தில் மக்கள் கூட்டம் அதிகம் நிறைந்த மார்க்கெட் பகுதியில் வீசி சென்றுள்ளது அந்தக் கொடூர கும்பல்.

அப்போது சிறுமி கனி மொழி போதை தலைக்கேறிய நிலையில் சுயநினைவின்றி கீழே விழுந்து கிடந்துள்ளார். இதனைப் பார்த்த பொதுமக்களும் அப்பகுதி காவலர்களும் உடனடியாக அவரை மீட்டு, திருச்சி அரசு பொது மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து கார் ஓட்டுநர் மாரீசெல்வனைத் தேடி வந்த பொதுமக்கள், இரவு 7.30 மணி அளவில் மீண்டும் கல்மந்தை காலனிக்கு வந்த அவரைப் பிடித்துத் சரமாரியாகத் தாக்கினர். இதில் மாரீசெல்வனுக்கு மண்டை உடைந்து பலத்த காயம் ஏற்பட்டது. பின்னர் 108 ஆம் புலன்ஸ் மூலம் அவரை மீட்டு சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தற்போது சிறுமி கனி மொழி திருச்சி அரசு மருத்துவமனையில் சுயநினைவின்றி தொடர்ந்து தீவிர சிகிச்சையில் இருந்து வருகிறார். இதுக்குறித்து காந்தி மார்க்கெட் காவல் நிலையப் போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இது குறித்து தகவல் அறிந்த சிறுமியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அரசு மருத்துவமனை முன்பு திரண்டனர். தொடர்ந்து சிறுமியை பார்க்க அனுமதிக்க வேண்டும், குற்றவாளிக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் செய்தியாளர்களை சந்தித்த பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினர் வீரசெல்வி கூறியதாவது: -

திருச்சி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வரும் சிறுமியை நேரில் சந்தித்து பார்த்த போது, எனக்கு குளிர்பானத்தில் ஏதோ கலந்து கொடுத்தார்கள். சிறிது நேரத்தில் எனக்கு மயக்கம் வந்துவிட்டது. என்னை வீட்டில் கொண்டு போய் விடுமாறு ஓட்டுனரிடம் கேட்டேன். அப்போது அவர் என்னை காரில் வைத்து வெகு தூரம் சுற்றிக் கொண்டே இருந்தார். பின்பு நான் முழுமையாக மயங்கிய நிலையில் இருந்தேன். அப்போது பலர் என்னிடம் வந்து சென்றதாக கூறினார். என்னால் முடியவில்லை. என்னை காப்பாற்றுங்கள் என்று சிறுமி கதறி அழுததாக தெரிவித்தார்.

மேலும் சிறுமிக்கு போதை மருந்து கொடுத்து உள்ளார்கள். தற்போது கூட சுயநினைவு இல்லாமல் தான் இருக்கிறார். எங்களையே யார் என்று தெரியவில்லை என்று கூறினார். சிறுமி முழுமையாக குணமடைந்தால் என்ன நடந்தது என்பதை தெளிவாக கூறுவார். இந்தப் புகாரில் யார் உடந்தையாக இருந்தாலும் அவர்களை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

காவிரி விவகாரத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு

என்ன பதில் சொல்லப் போகிறார் முதல்வர் ஜோசப் விஜய்?

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, ஜூன் 5 - காவிரியின் குறுக்கே அணை கட்டும் விவகாரத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார் முதல்வர் ஜோசப் விஜய்? என்று கேள்வி எழுப்பி 'தினகரன்' தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

கர்நாடக மாநிலம் ராம நகரா மாவட்டத்தில், தமிழ்நாட்டு எல்லையான பிலிகுண்டுலுவுக்கு மேற்கே சுமார் 15 கி.மீ. தொலைவில் காவிரி ஆறு பாயும் குறுகிய மலைப்பகுதியே 'மேகதாது' என அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் சுமார் ரூ.9,000 கோடி மதிப்பீட்டில், 67.16 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட புதிய அணை மற்றும் நீர்மின் நிலையம் அமைக்க கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளது. பெங்களூரு நகரத்தின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், 400 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கவும் இந்த அணை அவசியம் என்பது கர்நாடகா அரசின் வாதம்.

ஆனால், தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகள், குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்கள் இந்த அணையின் காரணமாக பாலைவனமாகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.

இதைத்தான் முன்னாள் முதல்வர்கள் கலைஞர், மு.க.ஸ்டாலின் ஆகியோர் கடுமையாக எதிர்த்து, தடுத்து நிறுத்தினர். காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, கர்நாடகா அரசு, தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய தண்ணீரை முறையாக திறக்க வேண்டும்.

ஆனால், மேகதாதுவில் புதிய அணை கட்டினால், உபரிநீர் தமிழ்நாட்டிற்கு வருவது முற்றிலும் தடுக்கப்படும். கர்நாடகாவில் உள்ள அனைத்து அணைகளும் (கே.ஆர்.எஸ்., கபினி போன்றவை) நிரம்பி, இந்த மேகதாது அணையும் நிரம்பிய பிறகே தமிழ்நாட்டிற்கு மிச்சம் மீதி தண்ணீர் திறக்கப்படும். தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களின் விவசாயம் முற்றிலும் காவிரியை நம்பியே உள்ளது.

தண்ணீர் வராமல் போனால், லட்சக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் காய்ந்து, விவசாயம் பொய்த்து போகும். ஒட்டுமொத்த டெல்டா பகுதியும் பாலைவனமாக மாறிவிடும். இந்த அணை கட்டப்பட்டால் தமிழ்நாட்டில் கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்படும். காவிரி நீர் என்பது இரு மாநிலங்களுக்கும் பொதுவானது. கீழ்மடை மாநிலமான தமிழ்நாட்டின் அனுமதியின்றி காவிரியின் குறுக்கே எந்தவொரு புதிய கட்டுமானத்தையும் மேற்கொள்ளக்கூடாது என உச்சநீதிமன்றம் தெளிவாக தீர்ப்பு வழங்கியுள்ளது

இந்த தீர்ப்பை உடைத்து, தமிழ்நாட்டை வஞ்சம் தீர்க்க வேண்டும் என நேரடியாக மோதுகிறது கர்நாடகா காங்கிரஸ் அரசு. இந்த பேராபத்தை உணராமல், தனது சுயநலம் ஒன்றை மட்டுமே முன்னிறுத்தி, தமிழ்நாட்டில் அக்கட்சியுடன் கைகோர்த்துள்ளார் முதல்வர் ஜோசப் விஜய். "மேகதாது அணை கட்டும் விவகாரத்தில், தமிழ்நாட்டில் தி.மு.க.வும், அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் இருக்கும் வரை தான் எங்களுக்கு பெரும் தடையாக இருந்தது.

தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, விஜய் முதல்வராக இருக்கிறார். அவரெல்லாம் எங்களுக்கு ஒரு ஆளே கிடையாது. மேகதாதுவில் அணை கட்டியே தீருவோம்" என வெளிப்படையாக கொக்கரிக்கிறார் கர்நாடக முதல்வர் டி.கே.சிவக்குமார். "விஜய் ஒரு முதிர்ச்சியற்ற அரசியல்வாதி. இந்திய தேசிய காங்கிரஸ் அவருடன் இல்லை" என்றும் அவர் சாடியுள்ளார்.

ஆனால், அவருக்கு விஜய் வாழ்த்து தெரிவிக்கிறார். மேகதாது அணை விஷயத்தில் உங்கள் வீரம் எங்கே சென்றது. இந்த பேராபத்தை உணராமல், கர்நாடகா முதல்வரை எதிர்க்க துணிவில்லாமல், சரண்டர் ஆகியுள்ளார் முதல்வர் விஜய் என டெல்டா விவசாயிகள் கடும் விமர்சனத்தை முன் வைத்துள்ளனர். இந்த விவகாரத்தில் அவர், தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்? என்கிற கேள்வியையும் எழுப்பியுள்ளனர். இதைத் தான் நாடும் எதிர்பார்க்கிறது.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.

தினகரன்
ஜூன் 4, 2026 வியாழக்கிழமை

எங்கே சென்றது வீரம்....?

கர்நாடக மாநிலம் ராமநகரா மாவட்டத்தில், தமிழ்நாட்டு எல்லையான பிலிகுண்டுலுவுக்கு மேற்கே சுமார் 15 கி.மீ. தொலைவில் காவிரி ஆறு பாயும் குறுகிய மலைப்பகுதியே 'மேகதாது' என அழைக்கப்படுகிறது.

இப்பகுதியில் சுமார் ரூ.9,000 கோடி மதிப்பீட்டில், 67.16 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட புதிய அணை மற்றும் நீர்மின் நிலையம் அமைக்க கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளது. பெங்களூரு நகரத்தின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், 400 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கவும் இந்த அணை அவசியம் என்பது கர்நாடகா அரசின் வாதம்.

ஆனால், தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகள், குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்கள் இந்த அணையின் காரணமாக பாலைவனமாகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன. இதைத்தான் முன்னாள் முதல்வர்கள் கலைஞர் கருணாநிதி, மு.க.ஸ்டாலின் ஆகியோர் கடுமையாக எதிர்த்து, தடுத்து நிறுத்தினர்.

காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, கர்நாடகா அரசு, தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய தண்ணீரை முறையாக திறக்க வேண்டும். ஆனால், மேகதாதுவில் புதிய அணை கட்டினால், உபரிநீர் தமிழ்நாட்டிற்கு வருவது முற்றிலும் தடுக்கப்படும். கர்நாடகாவில் உள்ள

நகரச் செயலாளர் சாதிர் தலைமை! தென்காசி நகர தி.மு.க. சார்பில்

கலைஞர் 103 வது பிறந்தநாள் விழா! பிரியாணி வழங்கி கொண்டாட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் – மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தென்காசி, ஜூன் 5 - தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசியில் நகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு அலங்கரிக்கப்பட்ட கலைஞர் அவர்கள் திருஉருவப் படத்திற்கு தென்காசி நகரச் செயலாளர் சாதிர் தலைமையில் மாலை அணிவித்து, பட்டாசு வெடித்து பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் பிரியாணி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் பங்கேற்று துவக்கி வைத்தனர்.

நிகழ்வில் நகர நிர்வாகிகள் கிட்டு, ராம்துரை, பால்ராஜ், ரஹமத்துல்லா, மாவட்ட நிர்வாகிகள் முத்துக்குமார், தங்கபாண்டியன், ஜாஹீர் உசேன், தென்காசி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முகமது ரபி, நிர்வாகிகள் அருண், செய்யது அலி, முரளி, அப்துல் கரீம், இசக்கி சுந்தர், மாணவரணி மைதீன், நகர வர்த்தக அணி சன் ராஜா, சபரி சங்கர், தொண்டரணி சோமசுந்தரம், மாரியப்பன், ஹாமிம், அப்துல் பாசித், அறங்காவலர் இசக்கி ரவி,

வட்டச் செயலாளர்கள் ராமராஜன், வழக்கறிஞர் ரகுமான் சாதத், மோகன் ராஜ், முருகேசன், சண்முக நாதன், வேம்பு அருணாசலம், பால்துரை,வேல் ஐயப்பன், பரமசிவன், ராமநாதன், சாரதிமுருகன், பொத்தை முருகன், கல்யாணசுந்தரம், மைதீன், அப்துல் ரசாக், கரிகாலன், சிவராம்குமார், செல்வம், குமார், முருகன், பூஆறுமுகம், பீர்முகம்மது உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து மேலகரம் பேரூர் தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி, பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

நிகழ்வில் பேரூர் துணை செயலாளர் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஜீவானந்தம், துணைச் செயலாளர் கந்தசாமி, முன்னாள் வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வேலுச்சாமி, முன்னாள் ஒன்றியச் செயலாளர் ராமையா என்ற துரை, மாவட்டப் பிரதிநிதி சம்முகுட்டி, அறங்காவலர் வீரபாண்டியன், ஒன்றிய பிரதிநிதிகள் நன்னை பால சுப்பிரமணியன், யாகவா சுந்தர், ஈனமுத்து பாண்டியன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கதிர், பேரூர் பொருளாளர் ரமேஷ், இளைஞர் அணி அமைப்பாளர் பார்த்திபன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

வென்றது தூத்துக்குடி; நன்றி சொன்னது திருச்செந்தூர்!

தன் தொகுதியே தெரியாத த.வெ.க. அமைச்சர்!

தூத்துக்குடி, ஜூன் 5 – தவெக அரசின் மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் கடந்த 30ம் தேதி திருச்செந்தூர் கோயிலில் சாமி தரிசனத்திற்கு வருகை தந்தார்.

இதையடுத்து மணப்பாடு, அமலி நகர், வீரபாண்டியபட்டணம் உட்பட பல்வேறு பகுதிகளில் மக்கள் சந்திப்பு நடத்தினார். தொடர்ந்து திருச்செந்தூர் தொகுதியைச் சேர்ந்த புன்னைக்காயல் பகுதிக்குச் சென்ற அமைச்சர், அங்கு திறந்த காரில் நின்றபடி 'எல்லாருக்கும் வணக்கம், வணக்கம், வணக்கம். புன்னைக்காயல் மக்களே ஐ லவ் யூ, லவ் யூ, லவ் யூ, லவ் யூ. உங்கள் அன்புக்கு, உங்கள் ஆதரவுக்கு ரொம்ப ரொம்ப நன்றி, கேள்விப்பட்டேன் அதிக வாக்குகளை, வாக்கு வித்தியாசத்தில் என்ன ஜெயிக்க வச்ச உங்க ஊருக்கு, உங்க மக்களுக்கு, 'நம்ம மக்களுக்கு' கோடான கோடி நன்றிகள், நன்றிகள் என பேசினார்.

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் மக்கள் குறைகளை கேட்காமல் அவர் வெற்றி பெற்ற தூத்துக்குடி தொகுதி இல்லை என தெரியாமல் வேறு தொகுதி மக்களுக்கு என்னை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயிக்க வைத்ததற்கு நன்றி என தெரிவித்ததை அதிமுக நிர்வாகி ஒருவர் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதைப்பார்த்த நெட்டிசன்கள் தொகுதி தெரியாமல் உளராத, காமெடி ஷோ கண்டினியூ, சினிமாவிலேயே சுத்தமாக நடிக்க வராது, அரசியலில் நல்லா நடிச்சி பழகிட்ட, எந்த தொகுதி என தெரியாமல் நன்றி தெரிவிப்பதா என பல்வேறு வகையாக அமைச்சர் ஸ்ரீநாத்தை கலாய்த்து பதிவிட்டு வருகின்றனர். இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–வது பிறந்தநாளை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் மாளிகை முன்பு அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

தேனி வடக்கு மாவட்டம், பெரியகுளம் தொகுதி வடுகபட்டியில் வள்ளலார் அறக்கட்டளையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு பெரியகுளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.எம்.பாண்டியன் ஏற்பாட்டில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. 200க்கும் மேற்பட்டோருக்கு மதிய உணவு வழங்கினார். உடன் முன்னாள் எம்.எல்.ஏ. சரவணகுமார், வழக்கறிஞர் நிஷாந்த், வடுகட்டி பேரூராட்சித் தலைவர் நடேசன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.